# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர்188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:***ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **12 ஜனவரி 2020** | **ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா** | **முதல் ஆண்டு** |



## உங்கள் சிந்தனைக்கு...

ஆண்டின் பொதுக்காலம் முதல் ஞாயிறு. இறைமகனின் திருமுழுக்குப் பெருவிழா. இறைமகன் இயேசு பிறந்து முப்பது ஆண்டுகள் ஞானத்திலும் உடல்வளர்ச்சியிலும் மிகுந்துக் கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார். இப்பொழுது பொதுவாழ்வில் நுழையும் முன் அவருக்குத் தேவைப்பட்டது தூய ஆவியாவரின் ஆற்றல். துணிவுடன் தன் மூன்று ஆண்டுக் காலப் பொது வாழ்வில் மக்களைச் செம்மைப்படுத்த, தூய ஆவியானவரின் அபிஷேகமும், தந்தையாம் கடவுளின் அருளும் தேவைப்பட்டபோது, அவர் திருமுழுக்கு யோவானிடம் சாதாரண மக்களைப் போல வந்து நின்றுத் திருமுழுக்குப் பெறுகிறார். அவ்வேளையில் ஆவியானவர் இறங்கி வர, தந்தை தன் ஒரே மகனிடம் பூரிப்படைவதை வானத்திலிருந்து கேட்டக் குரலொலிச் சுட்டிக் காட்டுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் தூய ஆவியினால் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோ. நாம் இன்று அதை வெறும் சடங்காகப் பாராமல் திருமுழுக்கின் வெளிப்பாடுகளை உணர்ந்து அதனை நடைமுறைப்படுத்த முயலுகிறோமா என்ற கேள்விகுறி நம் உள்ளத்தில் எதிரொலிக்கின்றது. திருமுழுக்கின் முலம் இறைவனின் பிள்ளைகளான நாம் அதை நம் பொதுவாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை எடுத்துரைக்கும் இப்பெருவிழாத் திருப்பலிக் கொண்டாட்டங்களில் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டு இறையருளையும் இரக்கத்தையும் தூயஆவியின் ஆற்றலையும் பெற மன்றாடுவோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்



பள்ளி விடுமுறை காரணமாக தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள், புதிய வருடத்தில் **மீண்டும் இன்று முதல் (12-01-2020) ஆரம்பமாகும்** என்பதைக் கவனத்தில் கொள்ளவும். உங்கள் பிள்ளைகளும் கடவுளைப்பற்றிய அறிவிலும் ஞானத்திலும் வளர அவர்களை அனுப்பி வையுங்கள்.




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**19-01-2020 ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கான காணிக்கை

கடந்த ஞாயிறு (05-01-2020) அன்று எடுக்கப்பட்ட இரண்டாம் காணிக்கையில் கிடைத்த மொத்த தொகை S$ 4201.55

பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட தொகை S$ 5730.00

## நன்றியின் விழா - பொங்கல் விழா கொண்டாட வாரீர்!



அப்போஸ்தலர்கள் இயேசுவோடு இணைந்து ஒப்புக் கொடுத்தது போல, 24 பொங்கல் பானைகளை அடையாளமாக்கி 19-01-2020 அன்று மாலை 4:30 மணிக்கு நமது ஆலயத்தில் நன்றிப் பலியாக ஒப்புக் கொடுப்போம். தொடர்ந்து மாலை 6:30 மணிக்குத் திருப்பலி நடைபெறும்.

எல்லோருக்கும் விலைமதிப்பில்லாத இயேசுவின் பொங்கல் பானையுடன் இணைந்து கொண்டாட வாய்ப்புண்டு. எனவே விரும்புவோர், பங்கு அலுவலகத்தில் உங்கள் காணிக்கையாக $100 வெள்ளிகள் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.




**வாழ்வின் விளைவின் காணிக்கையை கடவுளுக்கு நன்றிப் பலியாக்க வாரீர்!**

## தூய லூர்து அன்னை ஆலயத் திருவிழா 2020

நம்முடைய பங்கின் பாதுகாவலியாம் தூய லூர்து அன்னையின் ஆண்டுத் திருவிழா 30-01-2020 (வியாழன்) முதல் 07-02-2020 (வெள்ளி) வரை நவநாட்களும், **08-02-2020 சனிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவிழா திருப்பலியும் நடைபெறும்.** அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய தேர்ப்பவனியும் நடைபெறும். திருவிழா திருப்பலி நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்ட பேராயர் மேதகு. வில்லியம் கோ அவர்களால் ஒப்புக் கொடுக்கப்படும்.





05-02-2020 (புதன்), 06-02-2020 (வியாழன்), 07-02-2020 (வெள்ளி) ஆகிய நாட்களில் மாலை 8:00 மணிக்குத் **தமிழில் நவநாள் திருப்பலி நடைபெறும்.** அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

**குறிப்பு:** நம் பங்கின் ஆண்டுத் திருவிழாவை சிறப்பிக்க நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. நன்கொடை அளிக்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | எசாயா 42:1-4, 6-7 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 29: 1-2, 3ac-4, 3b, 9c-10 (பல்லவி: 11b) |
| **பதிலுரை:** ஆண்டவர் தம் மக்களுக்கு அமைதி அளித்து ஆசி வழங்குவாராக! | |
| **இரண்டாம் வாசகம்:** | திருத்தூதர் பணி 10:34-38 |
| **வாழ்த்தொலி:** அல்லேலூயா, அல்லேலூயா! வானம் திறந்தது; தந்தையின் குரலொலி கேட்டது: “என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவருக்குச் செவிசாயுங்கள்.” அல்லேலூயா. | |
| **நற்செய்தி வாசகம்:** | மத்தேயு 3:13-17 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 &மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 &மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி(ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதிஇரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:**உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

